தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

07.08.2023

# ஒன்றிய பொதுத்துறை நிறுவனங்களில் காலியிடங்கள் குறித்த கேள்விக்கு ஒன்றிய நிதி அமைச்சர் பதிலளிப்பாரா? தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி கேள்வி

அ) ஒன்றிய பொதுத்துறை நிறுவனங்களில் (CPSES) மஹரத்னா, நவரத்தினா, மற்றும் மினி ரத்னா ஆகிய நிறுவனங்களில் உள்ள மொத்தம் ஆயிரக்கணக்கான காலியிடங்கள் நிரப்பப்படவில்லையா?

ஆ) ஒன்றிய பொதுத்துறை நிறுவனங்களில் பட்டதாரி பயிற்சி பொறியாளர்கள், பொறியாளர் பதவிக்கான திறன் தகுதி தேர்வில், (GATE) தேர்வில் தேர்ச்சி சதவீதம் பெறுவது கட்டாயம் என்று அரசு சமீபத்தில் அறிவித்துள்ளதா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

இ) கேட் தேர்வு எழுத வாய்ப்பு இல்லாத தகுதி வாய்ந்த பொறியியல் பட்டதாரிகளுக்கு, சம வாய்ப்புகளை வழங்க, அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

ஈ) ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள், தேசிய தேர்வு முகமை (NTA) நடத்தும் நுழைவுத் தேர்வில் தகுதி பெற வேண்டுமா? வாய்வழி நேர்காணல் மூலம், மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் பதவிகளை பெற முடியுமா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

**ஒன்றிய நிதி துறை இணை அமைச்சர் பகவத் கிஷன் ராவ் கரத் பதில்**

அ) பொது நிறுவனங்களின் கணக்கெடுப்பு 2021 - 22ல் கிடைத்த தகவலின்படி, இயங்கி வரும் 248 ஒன்றிய பொதுத்துறை நிறுவனங்களில், (CPSES) வழக்கமான ஊழியரகளின் மொத்த எண்ணிக்கை, 31, மார்ச், 2022 நிலவரப்படி, 8.41 லட்சமாக இருந்தது. காலியிடங்கள் தொடர்பான தகவல்கள், மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் கீழ் உள்ள, வாரிய நிலைப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதால், பொது நிறுவனங்கள் துறை, ஒன்றிய பொதுத்துறை நிறுவனங்களை மையமாக பராமரிக்கப்படவில்லை.

ஆ) ஒன்றிய பொதுத்துறை நிறுவனங்கள், முதன்மையான வணிக நிறுவனங்களாக இருப்பதால், அவைகளின் வணிக திட்டங்களின் அடிப்படையில், வேலை ஆட்களை நியமிக்கின்றன. அதே சமயத்தில், மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் வாரியங்களானது, பட்டதாரி/ நிர்வாக பயிற்சியாளர்கள் உட்பட வாரிய கீழ்நிலை பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள அதிகாரம் பெற்றுள்ளது.

******